01-10-2024

MCOP. No.195/2022

ம.சா.1 – திரு.அய்யப்பன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:

விபத்தானது 6/3/2022 அன்று மதியம் 2.50 மணியளவில் நடந்தது என்றால் சரிதான். தேனி – கம்பம் செல்லும் பைபாஸில் போடேந்திரபுரம் பிரிவில் நடந்தது ன்றால் சரிதான். போடேந்திரபுரம் பிரிவு என்பது 4 ரோடு சந்திக்கும் இடம் என்றால் சரிதான். அதனால் அந்த இடத்தில் பேரிகாடு வைத்திருப்பார்கள் என்றால் சரிதான். நான் விபத்து சமயத்தில் KN 46 V8191 என்ற காரில பயணம் செயதேன் என்றால் சரிதான். அந்த காரின் உரிமையாளர் யார என்றவிபரத்தை மனுவிலோ எனது விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த வாகனத்தின் பதிவு சான்றிதழோ காப்பீட்டு சான்றிதழோ நான் தாக்கலா செய்யவிலைா என்றால சரிதான். அந்த வாகனம் சம்மந்தப்பட்ட நபர்களை வழக்கின் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால சரிதான். வாகனத்தை ஓட்டிச்சென்ற ராதே சியாம் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது என்பதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால ்சரிதனா. நான் வந்த காரில் இடித்ததாக சொல்லப்பட்டும் TN 45 AS0180 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தின் ஓட்டுநரின் உரிமத்தையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.மேற்படி வாகனம் வாழைப்பழ லோடு ஏற்றிக்கொண்டு முழு லோடுடன் வந்தது என்றால் சரிதான். என்னுடைய மனுவில் மேற்படி வாகனம் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்து திடீரென்று கிழக்கே திரும்பியதாக சொல்லியுள்ளேன் என்றால ச்ரிதான். அவ்வாறு நான் சொல்லும் நிலையில் பைபாஸ் சாலையில் வைக்கப்பட்டிருந்த பேரிகாடை தாண்டி விபத்து நடந்திருக்கும் என்றால சரிதான். நான் வந்த வாகனமும் பேரிகாடை தாண்டி வரும்போது தான் விபத்து நடந்தது என்றால சரிதான். முழுலோடுடன் வந்த TN 45 AS0180 என்ற பதிவு எண் கொண்ட வாகனம் பேரிகாடு இருக்க கூடிய இடத்தில் பேரிகாடை தாண்டி வலது பக்கமாக திரும்பும் போது வேகமாக வர வாய்ப்பு இல்லை என்றும் நாங்கள் வந்த வாகனம் தான் நேராக

செல்வதால் வேகமாக வந்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ–3 மோட்டார வாகன ஆய்வறிக்கையில் எங்கள் மீது மோதிய வாகனத்திற்கு முன்புறம் தான் சேதமாக உள்ளதாக சொல்லப்பட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. நாங்கள் வந்த வாகனத்திற்கும் முன்புறத்தில் தான் சேதம் இருந்தது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மோட்டார் வாகன ஆய்வாளர் எங்கள் மீது மோதிய வாகனத்தினை 15 நாட்கள் கழித்தும் நாங்கள் வந்த வாகனத்தினை 15 நாட்கள் கழித்தும் ஆய்வு செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் அரசு மருத்துவமனையில் தான் சிகிச்சை எடுத்துள்ளேன் என்றால சரிதான். நான் தொடர்சிகிச்சை எடுத்து வருவதை காட்டும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு விபத்து சமயத்தில் பின்னந்தலையில் மட்டும் அடிப்பட்டது என்றால் சரியல்ல. கண் மற்றும் முகம் பகுதியில் அடிபட்டது. விபத்தினால் ஏற்பட்ட காயங்களினால் எனது அன்றாட வாழ்க்கையில் எவ்வித பாதிப்பும் இல்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் மாடு விற்பனை செய்து அதன் மூலம் மாதவருமானம் ரூ.25,000/– வருவதை காட்டும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால்சரிதான். நான் சொல்வது போல் எனக்கு ஏற்பட்ட காயங்களினால் நான் செய்துவந்ததாக கூறப்படும் தொழிலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று சொன்னால சரியல்ல. மருத்துவ செலவு ஏற்பட்டதை காட்டும் ஆவணங்கள் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் நான் கோரியுள்ள இழப்பீடு சம்மந்தமாக அதனை நிரூபிப்பதற்குரிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால சரியல்ல. பல்வேறு தலைப்புகளின் கீழ் நான் கோரியுள்ள தொகை அதிகமானது என்றும் அது எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. விபத்தானது முழுக்க முழுக்க நான் பயணம் செய்த வாகனத்தின் ஓட்டுநரால் ஏற்பட்ட நான் கோரியுள்ள இழப்பீடு கிடைகக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. நான் பயணித்த வாகனத்தின் ஓட்டுநருக்கு ஓடடுநர் உரிமம் இல்லாததாலும், காப்பீட்டு சான்றிதழ் இல்லாததாலும் எனக்கு இழப்பீடு கிடைக்கவேண்டி மேற்படி வாகனத்தினால் விபத்து ஏற்பட்டதாக சொல்லி இந்த வழக்கை தாக்கல செய்தள்ளேன் என்றால்

**சரியல்ல. 3 ம் மனுதாரரை பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்க வேண்டியது என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை – இல்லை.**

*Taken down by me/before me in open Court,*
*interpreted/read over to the witness and*
*admitted by the deponent to be correct.*

*Sd/- K. Kavitha*

Chief Judicial Magistrate,
Theni.